மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 270, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

270—

வேளாண்மைத் துறையின் மூலம் ஓரிதழ் தாமரை உற்பத்தி.

***24952**—*திரு. சி. இராமசுவாமி :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக விலைக்கு விற்கப்படும் அரிய ஓரிதழ் தாமரை மூலிகையின் விதைகள் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வேளாண்மைத் துறையின் மூலம் விதைகளை உற்பத்தி செய்து விநியோகிக்க அரசு முன்வருமா ?

(இ) இதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடம் விளம்பரப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஓரிதழ் தாமரை எனும் மூலிகை தமிழ்நாட்டில் இயற்கையாக சாதாரணமாகக் கிடைக்கும் மூலிகையாகும். இது ஒரு சில மருந்துகளில் மட்டுமே உபயோகிக்கப்படுகிறது. பசுமையான ஓரிதழ் தாமரை கிலோ ஒன்றுக்கு ரூ. 3.00-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இது எங்கும் பயிரிடப்படுவதில்லை.

(ஆ) இம்மூலிகையின் விதைகள் இயற்கையாகவே கிடைக்கின்ற காரணத்தால் விதை உற்பத்தி சாகுபடி செய்ய இன்னும் தேவை ஏற்படவில்லை.

(இ) இம்மூலிகையின் விலையும் அதிகரித்து தேவையும் அதிகமானால் தக்க முயற்சிகளும், விளம்பரமும் மேற்கொள்ளப்பட வாய்ப்பு உண்டு.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகை கிடைக்கவில்லை என்ற செய்தியைப் படித்தபிறகுதான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். இந்த மூலிகை எந்தெந்த இடங்களில் அதிக அளவில் கிடைக்கப் பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைச் செடி தமிழகத்திலே எல்லா இடங்களிலும் கிடைக்கிறது. இன்றைக்குக் காலையிலே இந்த மன்றத்திற்கு வருகின்றபோது என்னுடைய வீட்டின் அருகிலேகூட இந்த மூலிகைச் செடி இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : இந்த ஓரிதழ் தாமரை மூலிகை மூலமாக என்னென்ன பயன்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றன; இது குறித்து விவசாய ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ? அதன் விளைவுகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விவசாயிகள் பயிரிடுவது இல்லை. இதை மூலிகை மருந்துக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய சிறப்புமிக்க மூலிகை பற்றிய புத்தகத்திலே ஒரு குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செடி தென்காசி, குற்றாலம் ஆகிய மலைப் பகுதிகளில் அதிகமாக உள்ளது. உடலுக்கு அழகு தரும்; அதாவது, வண்ணம் தரக்கூடியது. இச்சையைப் பெருக்கி, உடலை வளமாக்கும். பச்சைக் கற்பூரம், கோரோசனை மற்றும் ஓரிதழ் தாமரை இதழ்களை, பசு வெண்ணையுடன் தேய்த்து வந்தால், மேகவெட்டைப் புண், மண்டைப் புண் ஆகியவை நீங்குமென்றும், ஜுரம், இளைப்பு நோய் இவற்றைப் போக்குமென்றும், பெருத்த உடலைக்கூட சரியாக ஆக்குமென்றும் குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி, மேற்கொண்டு விவரங்களுக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குக் கேள்வி போடுங்கள். அவர் இன்னும் அதிகமாக விளக்கம் தருவார்.

அடுத்து, வினா எண் 271, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

271—

நெசவாளர் சங்கங்களுக்கு இலாப விகிதத்தினை உயர்த்துதல்.

***23960—*திருமதி க. பழனியம்மாள் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—